பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

**செ.வெ.எண் : 118** **நாள்: 18.08.2018**

**<u>பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 6 மாதம் முதல் 5 வயது வரையுள்ள 5,73,252 குழந்தைகளுக்கு வைட்டமின்– ஏ திரவம் வழங்கும் சிறப்பு முகாம் 20.08.2018 முதல் 25.08.2018 வரை நடைபெற உள்ளது என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில், மருத்துவ சேவைகள் துறையின் கீழ் இயங்கும் அனைத்து சென்னை ஆரம்ப சுகாதார மையங்கள், சென்னை மகப்பேறு மருத்துவமனைகள் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட மையங்களில் 20.08.2018 முதல் 25.08.2018 வரை (22.08.2018 நீங்கலாக) ஐந்து நாட்களுக்கு 6 மாதம் முதல் 5 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு வைட்டமின்–ஏ திரவ மருந்தை வாய்வழியாக கொடுக்கும் சிறப்பு மருத்துவ மருத்துவ முகாம்கள் காலை 8.00 மணி முதல் மாலை 3.00 மணி வரை நடத்தப்பட உள்ளது. இம்முகாமில் 6 மாதம் முதல் 5 வயது வரையுள்ள 5,73,252 குழந்தைகள் பயனடைவார்கள்.

தேசிய வைட்டமின்–ஏ குறைபாடு கட்டுப்பாடு திட்டம் முதன் முதலில் 1970ல் 7 மாநிலங்களில் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் 1975ம் ஆண்டு இந்தியா முழுவதும் விரிவாக்கப்பட்டது. குழந்தைகளின் கல்லீரலில் சேமித்து வைக்கப்பட்ட வைட்டமின்–ஏ நுண்ணூட்டு சத்து நான்கு மாதங்களில் குறைய ஆரம்பித்து ஆறு மாதங்களில் மிகவும் குறைந்து விடுகிறது. ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளின் இயல்பான வளர்ச்சி, அறிவுசார் வளர்ச்சி, மற்றும் உடல் வளர்ச்சிக்கும் தேவையான ஒரு நுண்ணூட்டு சத்தாக வைட்டமின்–ஏ விளங்குகிறது. வைட்டமின்–ஏ திரவம் வழங்குவதன் மூலம் பார்வையின்மை தடுக்கப்படுகிறது. எனவே, வைட்டமின்–ஏ நுண்ணூட்டு சத்து 6 மாதம் முதல் 5 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு வருடத்திற்கு இரண்டு முறை கொடுப்பது அவசியமாகிறது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சியால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இச்சிறப்பு முகாம்களில் பொதுமக்கள் தங்களின் 6 மாதம் முதல் 5 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு வைட்டமின்–ஏ திரவ மருந்தை வாய்வழியாக கொடுத்து பயனடையுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.த.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**